22.01.2026

OS No: 125/2022

பி.வா.சா. 2 - ராஜ் குமார் த/பெ. பழனிவேல்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

‘ 1. தாவா வழக்கானது சர்வே எண் 34/2019 சொத்திற்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தில் மொத்த விஸ்தீரணம் 11 1/2 செண்டு என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் மேற்படி 11 1/2 செண்டு நிலத்தினை எ னக்கு 3 1/2 செண்டு அளவிலும் எனது தகப்பனாருக்கும் சகோதரர்களுக்கும் 8 செண்டு அளவிலும் பாகம் பிரித்து கொண்டதாக சொல்லப்பட்ட சங்கதி உண்மை தானா என்றால் உண்மைதான். மேற்படி 3 1/2 செண்டு நிலம் தான் தாவா வழக்கு சொத்து என்றால் சரிதான். தாவா 3 1/2 செண்டு நிலத்தை பொறுத்து எனது தந்தைக்கும் சகோதரர்களுக்கும் பங்கு இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 1/2 செண்டு நிலத்திற்கான பணத்தை மாலதியிடம் நான் பெற்றேன் என்றால் இல்லை, மாலதியின் அண்ணன் பிரதிவாதி குமரேசனிடம் பெற்றேன். வா.சா.ஆ. 1 கிரையப்பத்திரமானது தாவா சொத்தை பொறுத்து மாலதி என்பவருக்கு எனது தந்தை எழுதிக் கொடுத்த பத்திரம் என்றும், அதில் நான் சாட்சி கையெழுத்து மட்டும் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் நான் படித்து பார்க்கவில்லை. தாவா சொத்தின் தார்சு வீடு ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு மின் கட்டண ரசீது வாதி மாலதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி ரசீது வாதி மாலதி பெயரில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி வீட்டில் மாலதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சமீப காலமாக குடியிருந்து வருகிறார். எனது நிருபணவாக்குமூலத்தில் வாதியின் சகோதரி மகளான முருகேசன் என்பவரின் பேத்தி நகையை திருடியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.01.22 17:07:51 +0530